பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. கடந்த நிதி ஆண்டில் ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பாதுகாப்பு தொழில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
2. தாய் சேய் உயிர் காப்பதில் இந்தியா வியத்தகு முன்னேற்றம் அடைந்திருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
3. பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பாலான இடங்களில் வெற்றிபெற்றுள்ள திரு **Keir starmer** தலைமையிலான தொழிலாளர் கட்சி அங்கு ஆட்சி அமைக்கிறது.
4. இஸ்ரேல் - காஸா போர் நிறுத்தத்துக்கான சமரச பேச்சுக்கள் நடத்துவதற்கான தூதுக்குழுவை அனுப்ப இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு ஒப்புதல் அளித்துள்ளார்.
5. இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

கடந்த நிதி ஆண்டில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 887 கோடி ரூபாய் அளவுக்கு பாதுகாப்பு தொழில்துறையில் உற்பத்தி செய்து இந்தியா சாதனை படைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

2022-23-ஆம் ஆண்டைக்காட்டிலும் இது 16 புள்ளி எட்டு சதவீதம் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இத்தகவலை வெளியிட்டிருக்கும் அவர்,, உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில், பாதுகாப்பு துறை கொண்டுவரப்பட்டதை அடுத்து இந்த சாதனை இலக்கு எட்டப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி வழிகாட்டுதலின்பேரில் ஆண்டுக்கு ஆண்டு பாதுகாப்பு தொழில் உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தொழில் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பையும் கொண்டு வந்திருப்பதால் உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக அளவில் பாதுகாப்புத் தொழில் உற்பத்தியில் இந்தியா முன்னிலை பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாகவும் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த நிதி ஆண்டில் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இதர பொதுத்துறை நிறுவனங்கள் 29 புள்ளி இரண்டு சதவீத உற்பத்தியையும், தனியார் துறையினர் 20 புள்ளி எட்டு சதவீத பாதுகாப்பு உற்பத்தியையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மகப்பேறின்போது தாய் சேய் உயிர் காப்பதில் இந்தியா வியத்தகு முன்னேற்றம் அடைந்திருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் தாய் சேய் நல வாரியத்தின் கூட்டத்தில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

இந்த வாரியம் மேற்கொண்டு வரும் பணிகளை பாராட்டிய அமைச்சர், பெண்கள் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரை காப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதையும் வரவேற்பதாகத் தெரிவித்தார்.

உலகின் தென்பகுதி நாடுகளில் தாய் சேய் நலம் மற்றும் அவர்களுக்கான மருத்துவத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

உலகின் தென்பகுதி நாடுகளுக்கும், வடபகுதி நாடுகளுக்கும் இடையே சமமான பொருளாதார, சுகாதார அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு இந்தியா பல ஆண்டுகளாக முயற்சி எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவிலும் பெண்கள், குழந்தைகள் மற்றும் இளையோர் நலன் காக்க உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாகவும், பாலின சமத்துவத்தை பராமரிப்பதற்கும் முக்கியத்துவம் தரப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2030-ஆம் ஆண்டுக்குள் சுகாதாரத்துறையில் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் மேற்கொள்ளப்படும் தாய் சேய் நலன் மற்றும் இளையோர் நலன்களுக்கான திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

**[]<<<>>>[]**

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்டு க்வாட் அமைப்பின் மூத்த அதிகாரிகளின் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது.

கடந்த 2023-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற க்வாட் தலைவர்கள் உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை பல்வேறு க்வாடு பணிக்குழுக்கள் செயல்படுத்தி வரும் நிலையில், அவற்றின் தற்போதைய முன்னேற்றம் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு இந்த அமைப்பின் இணைச் செயலர் திரு அமெரிக்காஸ் தலைமையேற்றார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் சார்பில் துணைச் செயலர் திரு கே நாகராஜ் நாயுடு, ஆஸ்திரேலியாவின் சார்பில் திரு **Elly Lawson** ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் சார்பில் திரு பியூஜி மோட்டோவும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தோ பசிபிக் மண்டலத்தில் மக்களுக்கான பொருளாதார வசதிகள் மற்றும் கட்டமைப்புகளை மேம்படுத்துவது, பேரிடர் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகள், கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், தொலைத் தொடர்பு கட்டமைப்புகளை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மண்டல மற்றும் சர்வதேச அளவிலான முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் க்வாட் அதிகாரிகள் கூட்டம் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

அமர்நாத் குகைக் கோவிலில் ஆறாவது நாளாக நேற்று 24 ஆயிரத்து தொள்ளாயிரத்து 78 யாத்திரிகர்கள் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

இதுவரை மொத்தம் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 260 பேர் தரிசனம் செய்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி பெரும்பாலான இடங்களில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறது.

அக்கட்சியின் தலைவர் திரு **Keir starmer** அடுத்த பிரதமராகிறார்.

கடந்த 14 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திரு ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியை சந்தித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் கடைசி கிடைத்த தகவலின்படி மொத்தம் உள்ள 650 இடங்களில் தொழிலாளர் கட்சி 407 இடங்களிலும், கன்சர்வேட்டிவ் கட்சி 112 இடங்களிலும், லிபரல் டெமாகிரட்ஸ் 58 இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

இதர கட்சிகள் 13 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன.

இந்த தேர்தலில் மக்கள் அளித்த முடிவை தாம் தலைவணங்கி ஏற்றுக் கொள்வதாக கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரும், பிரிட்டன் பிரதமருமான திரு ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் கட்சியின் சார்பில் புதிய பிரதமராக பொறுப்பேற்க உள்ள திரு **Keir starmer–**க்கு தமது வாழ்த்துக்களையும் திரு ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி பாம்பன் பகுதி மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் இன்றும் தொடர்கிறது.

கடந்த 30-ஆம் தேதி எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 25 நாட்டுப்படகு மீனவர்களை விடுவிக்க

நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி பாம்பன் பேருந்து நிலையத்தில் இன்று அப்பகுதி மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வரும் 15-ஆம் தேதி வரை சிறையில் வைக்க ஊர்க்காவல்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், 300-க்கும் மேற்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாக 29 மாவட்டங்களில் வசிக்கும் 21 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மாநில ஆளுநர் திரு குலாப் சந்த் கட்டாரியா அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

மூவாயிரத்து 200-க்கும் மேற்பட்ட கிராமங்களும், 57 ஆயிரம் ஹெக்டேர் வேளாண் நிலங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

பிரம்மபுத்திரா, பாரக், ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் அபாயக்கட்டத்தை தாண்டியுள்ளதாக கூறப்படுகிறது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுக்கள் மீட்புப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

இதற்கிடையே, அஸ்ஸாம் மற்றும் அண்டை மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தில் அதி கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் மூலம் மத்திய அரசின் சார்பில் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ஆறாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

நிதி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக திருப்பத்தூர் மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் / விவசாயிகள் ) -59-- செகண்ட்*

**[]<<<>>>[]**

இஸ்ரேல் - காஸா போர் நிறுத்தத்துக்கான சமரச பேச்சுக்கள் நடத்துவதற்கான தூதுக்குழுவை அனுப்ப இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு ஒப்புதல் அளித்துள்ளார்.

எகிப்து அல்லது கத்தாரில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது இஸ்ரேல் நாட்டின் முடிவை இந்த தூதுக் குழு தெரிவிக்கும்,

பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருப்போரை விடுவிப்பதற்கான முடிவையும் இஸ்ரேல் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட விவாதத்திற்குப் பின் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திரு நேதன்யாகு சமரக தூதுக்குழுவை அனுப்ப ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறுகிறது.

சென்னையில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. சேலத்தில் இரவு மணி 7.15-க்கு தொடங்கவுள்ள இப்போட்டியில் சென்னை அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அடில் கல்யாண்பூர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சீன ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் இன்று சீனாவின் **Yi zhou** ம-ஐ எதிர்கொள்கிறார்.

***End of News***